# 02-07-2024 செய்தி

## போதைப் பொருள் மாஃபியா : மெக்சிகோ கடந்துவந்த பாதை

**முதல் பெண் அதிபர்**

- மெக்சிகோவில் வாக்களிக்கும் உரிமையின்றிப் பல தேர்தல்களைப் பெண்கள் கடந்துவந்த நிலையில், பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை 1953இல் வழங்கப்பட்டது.
- பாலினச் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் விதத்தில், அரசாங்கத்தின் அனைத்துப் பொறுப்புகளிலும், குறிப்பாக மாநில, நகராட்சித் தேர்தல்களிலும் பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பான அரசமைப்புத் திருத்தச் சட்டம் மெக்சிகோவில் 2019இல் கொண்டுவரப்பட்டது.
- மெக்சிகோவில் ரோமன் கத்தோலிக்கர்கள் பெரும்பான்மையானவர்களாக (78%) வசித்துவரும் நிலையில், முதல் பெண் அதிபராகச் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த கிளாடியா ஷின்பாம் வெற்றி பெற்றுள்ளார்.
- சுற்றுச்சூழல் அறிவியலாளரான் ஷீன்பாம், மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் பெற்று இந்த வெற்றியை அடைந்திருக்கிறார்.

**நம்பிக்கையளித்த வாக்குறுதிகள்**

- அதிகளவில் நிகழும் பாலியல் வன்கொடுமைகள், பெண் கொலைகள், போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடும் சர்வதேச மாஃபியாக்களின் வன்முறைச் செயல்கள், அரசுத் துறை அதிகாரிகளிடையே நிலவிவரும் கையூட்டுக் கலாச்சாரம் ஆகியவற்றின் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற அவர்.
- முன்வைத்த தேர்தல் வாக்குறுதிகள், பெரும்பான்மையான வாக்காளர்களின் நம்பிக்கையை அவருக்குப் பெற்றுத் தந்திருக்கின்றன.

**போதை மாஃபியாக்கள்**

- மெக்சிகோவின் மக்கள்தொகையின் மூன்றில் ஒரு பகுதியினர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்ந்துவருவதற்கும், அதிக எண்ணிக்கையிலான குற்றங்கள் நிகழ்வதற்கும், சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கும் காவல் துறை /நீதி பரிபாலனம் செய்யும் நீதித் துறை செயலிழந்து இருப்பதற்கும் பரவலாக நிலவிவரும் கையூட்டும், போதைப் பொருள் மாஃபியாக்களின் ஆதிக்கமும்தான் காரணம் என்பதை மகக்ள் உணர்ந்தனர்.
- அதன் விளைவாக, 70 ஆண்டுகளுக்கும் மேலாக மெக்சிகோவில் தொடர்ந்து ஆட்சி செய்துவந்த பி.ஆர்.ஐ. கட்சியைப் புறங்கணித்துவிட்டு, ஷீன்பாமை அவர்கள் தேர்ந்தெடுத்தனர்.
- போதைப் பொருள் மாஃபியாக்கள் ஆதிக்கம் செலுத்திவரும் நாடுகளுள் ஒன்றான மெக்சிகோ நாட்டில் 150க்கும் மேற்பட்ட மாஃபியா குழுக்கள் செயல்பட்டுவருகின்றன.
- இவர்கள் கோகெயன், ஓபியம், கஞ்சா போன்ற போதைப் பொருள்கள் மட்டுமின்றி, செயற்கையாகத் தயாரிக்கப்படும் போதைப் பொருள்களான மெத்தம்பேட்டமைகள், ஃபென்டானினல் போன்றவற்றையும் உலக நாடுகள் பலவற்றில் கள்ளச் சந்தையில் விற்கின்றனர்.

**இந்தியாவுக்கான எச்சரிக்கை**

- போதைப் பொருள்களைப் பயன்படுத்தும் பழக்கம் இந்தியாவில் அதிகரித்துவருகிறது. 10 முதல் 17 வயதுடைய 1.58 கோடி சிறார் இந்தியாவில் போதைப் பொருள்களைப் பயன்படுத்துகின்றனர்.
- சென்னை உள்ளிட்ட பல பகுதிகளில் பலகோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருள்கள் தொடர்ந்து பிடிபட்டுவருகின்றன.
- போதைப் பொருள் பயன்படுத்தும் கலாச்சாரம் நம்நாட்டில் வேகமாகப் பரவிவருகின்ற அபாயத்தை இவை வெளிப்படுத்துகின்றன.
- மெக்சிகோவைப் போல் சிக்கலான நிலைமைக்கு நம் நாடும் செல்லாமல் இருக்க, விழித்துக் கொள்ள வேண்டிய தருணம் இது!

## கல்வி கொள்கைக்கு

1. கல்வியை மாநில பட்டியலில் கொண்டு வர வேண்டும். தொடக்க கல்வி முதல், பல்கலை வரை தமிழ் வழிக் கல்வி ஏற்படுத்த வேண்டும். தமிழ் பல்கலையை சர்வதேச அளவில் தரம் உயர்த்த வேண்டும்.
2. அங்கன்வாடி மையங்கள், தாய் சேய் நல கவனிப்பு மையங்கள் எனவும், நர்சரி மற்றும் பிளே ஸ்கூல்கள், குழந்தைகள் மேம்பாட்டு மையங்கள் எனவும் பெயர் மாற்றப்பட வேண்டும். இந்த மையங்கள், சமூக நலத்துறை அமைச்சகத்தின் கீழ் வர வேண்டும்.
3. பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பில் இருந்து மட்டுமே மாணவர்களை சேர்க்க வேண்டும்; பாடத்திட்டத்தை தொழில் நுட்ப ரீதியாக கற்கும் வகையில் மாற்ற வேண்டும்.
4. மதிப்பெண் அடிப்படையில், ஒருவரை மற்றொருவருடன் ஒப்பிடுவது, தரவரிசை நிர்ணயிப்பது கூடாது. மாறாக மாணவர்களின் சிறப்பான முன்னேற்றத்தை பாராட்டுவதாக இருக்க வேண்டும். புதிய முயற்சி மேற்கொள்ளும் மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.
5. பாடங்களில் இருந்து மாணவர்கள் புரிந்தது என்ன: கற்பித்தலில் மாணவர்கள் தெரிந்து கொண்டது என்ன என்ற அடிப்படையில் தேர்வுகள் இருக்க வேண்டும். தொடக்கப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
6. பொதுத் தேர்வுகளில் மாற்றம் வேண்டும். மனப்பாடக் கல்வி முறை தேர்வாக இல்லாமல், பாடங்களை புரிந்து படித்து விடை எழுதியுள்ளனரா, என சோதிப்பதாக இருக்க வேண்டும்.
7. 10ம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு முந்தைய ஒன்பதாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு, பள்ளி அளவிலான தேர்வு போதும்; மாநில அளவிலான தேர்வு கூடாது.
8. நகர்ப்புற ஏழை குடும்பங்களின் மாணவர்களுக்கு கல்லூரிகள் வரை, உரிய கல்வி கிடைக்கச் செய்ய வேண்டும். சிறைவாசிகளின் பிள்ளைகள், ஆதரவற்ற பிள்ளைகளின் கல்விக்கு, நகர்ப்புற உள்ளாட்சி துறை உரிய வசதி ஏற்படுத்த வேண்டும்.
9. பெற்றோர், சமூகம், உறவுகளை இழந்த பிள்ளைகளை கைவிடாமல், அவர்களுக்கு உயர் கல்வியில், 1 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும்.
10. ஆசிரியர்களை நியமிக்க தகுதி பெறும், 'டெட்' தேர்வு என்பது வெறும் புத்தக கருத்துகள் அடிப்படையில் இருக்கக்கூடாது. ஆசிரியர்கள் கல்வி, கலை, அறிவியல், சமூக, ஜனநாயக கொள்கைகளை அறிந்தவர்களாக இருக்கின்றனரா; கலாச்சாரம், உள்ளூர் மொழி, பாலின சமத்துவம், மத, இன பாகுபாடற்ற எண்ணங்கள் உள்ளவர்களாக இருக்கின்றனரா என்பதை அறிவதாக இருக்க வேண்டும்.

## இலங்கை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மறைவு

- 2004-ஆம் ஆண்டு முதல் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு சம்பந்தன் தலைவராக உள்ளார். இவர் இலங்கை நாடாளுமன்றத்தில் 2015-ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்த இரண்டாவது தமிழராவார்.
- வழக்குரைஞரான இவர், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக 1977-ஆம் ஆண்டு திரிகோணமலை மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## இந்தியாவில் உலகின் பெரிய அருங்காட்சியகம் திறக்கப்படும்

- டெல்லியில் சென்ட்ரல் விஸ்டா மறுவடிவமைப்பு திட்டம் நிறைவடைந்த பிறகு 2025-ல் மத்திய அரசு அலுவலகங்கள் இடமாற்றம் செய்யப்படும்.
- இந்த இடமாற்றத்துக்கு பிறகு ரைசினா ஹில்ஸ் வளாகத்தில் உள்ள வடக்கு பிளாக், தெற்கு பிளாக் ஆகியவை அருங்காட்சியகமாக மாற்றப்படும்.
- இது உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகமாக இருக்கும். இது பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் உள்ள லூவ்ரே அருங்காட்சியகத்தை விட கிட்டத்தட்ட 2 மடங்கு இருக்கும். இது தொடர்பாக இந்தியா, பிரான்ஸ் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

வெற்றியின் முகவரி
SINCE 2006
SURESH' IAS ACADEMY